**மதுரை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

பிறப்பிப்பவர் : திருமதி.கா.கார்த்திகா, எம்.எஸ்ஸி., பி.எட்.,

**மூ.மு.எண்.0249 / அ2 / 2024 நாள். .08.2024.**

3/9/24

**பொருள்** : தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக்கல்வி - கருணை அடிப்படை நியமனம் – மதுரை மாவட்டம் - மேலூர் கல்விமாவட்டம் - தும்பைப்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்று பணிபுரியும் திரு.மு.மு.ராகுல் முனிராஜ் என்பாருக்கு 03.08.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக்கல்வி(பட்ஜெட் II)த் துறை, நாள் : 18.05.2018.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை நாள் : 26.02.2021.
3. அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக்கல்வி (பக1)த் துறை நாள் : 09.09.2022.
4. மதுரை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள். ந.க.எண்.4468/அ2/2021 நாள்.31.07.2023.
5. மதுரை மாவட்டம், மேலூர், மாவட்டக்கல்வி (இடைநிலைக்கல்வி) அலுவலரின் கடிதம் ந.க.எண்.340/அ1/2024 நாள்.05.01.2024.
6. மதுரை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள். ந.க.எண்.0249/அ2/2024 நாள்.11.05.2024.
7. அரசு கடித (efile) எண். 4419/தொ.க. 1(1)/2024-1 நாள் : 17.05.2024.
8. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.26062/ஜே/இ2/2023 நாள் : 22.05.2024.
9. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.039704/ஜே/இ2/2024 நாள்: 03.07.2024.

........

மதுரை மாவட்டம், மேலூர் கல்வி மாவட்டம், தும்பைப்பட்டி, அரசு மேல்நிலைப்பள்ளியில் கருணை அடிப்படை நியமனத்தின் மூலம் இளநிலை உதவியாளராகப் பணிவாய்ப்பு வழங்கப்பெற்ற திரு.மு.மு.ராகுல் முனிராஜ் என்பாருக்கு, பார்வை(7) – இல் காணும் அரசால் வெளியிடப்பட்ட அறிவுரைகளின் படி செயல்பட பார்வை(8) -இல் காணும் 22.05.2024 நாளிட்ட தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின்(பணியாளர் தொகுதி) செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, பார்வை(9)-இன் படி உரிய நடவடிக்கையின் பொருட்டு இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பணியாளர் பெயர், பதவி மற்றும் அலுவலகத்தின் பெயர் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமன நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| திரு.மு.மு.ராகுல் முனிராஜ் ,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம். | 03.08.2023<br>முற்பகல் | 03.08.2023<br>முற்பகல் முதல் |

த.பி.பா....

**நிபந்தனைகள் :**

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்றாண்டுகள் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. உயர்நிலைப்பள்ளிப் படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாமல் இருப்பின், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் இரண்டாம் நிலைத்தேர்வில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டிற்குள் தேர்ச்சி பெறவேண்டும்.
3. பவானிசாகர் அடிப்படைப்பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.
4. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.
5. பணிவரன்முறை செய்த விவரத்தினை சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள சார்ந்த பள்ளித்தலைமையாசிரியருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு :**

1. அசல் பணிப்பதிவேடு - 1 திரள்
2. திரு.மு.மு.ராகுல் முனிராஜ் என்பாரது இடைநிலைக்கல்வி இறுதி வகுப்புச் சன்றிதழ்(அசல்).
3. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் உண்மைத்தன்மைச் சான்று(அசல்)

முதன்மைக்கல்வி அலுவலர்,
மதுரை.

23/08/2024

**பெறுநர்**

1. சம்பந்தப்பட்ட பணியாளர்( சார்ந்த பள்ளித்தலைமையாசிரியர் வழியாக)

**நகல் :**

1. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), மேலூர், மதுரை மாவட்டம்.
2. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, தும்பைப்பட்டி,மதுரை மாவட்டம்.
3. கோப்புக்கு.